பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
30 01 2025 **THURSDAY** 6 30 **PM**

வணக்கம் - மாநிலச் செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் சுமூகமாக நடைபெற எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

2. தமிழகத்தின் நலனுக்கும், தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் பிரதமர் திரு. நரேந்திர மோடி கூடுதல் முக்கியத்துவம் அளித்து வருவதாக மத்திய சுரங்கத்துறை அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

3. சிறுபான்மை மக்களுக்கு திமுக அரசு எப்போதும் பாதுகாப்பாக இருக்கும் என்று மாநில அமைச்சர் திருமதி கீதா ஜீவன் கூறியுள்ளார்.

4. மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண திமுக அரசு தவறிவிட்டதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

5. தாய்லாந்து மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் ஸ்ரீகாந்த், சங்கர் சுப்பிரமணியன் மற்றும் ரக்ஷிதா காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

<<<<>>>>>

நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத்தொடரில் 16 மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இந்த கூட்டத்தொடர் சுமூகமாக நடைபெறுவது குறித்து விவாதிப்பதற்காக இன்று புதுதில்லியில் நடைபெற்ற அனைத்துக்கட்சி கூட்டத்திற்கு பின்னர் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ செய்தியாளர்களிடம் பேசினார்.

இந்த கூட்டத்தொடர் சுமுகமாக நடைபெற எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று இக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

பட்ஜெட் கூட்டத்தொடர் குடியரசுத் தலைவர் உரையுடன் நாளை தொடங்க உள்ளதாகவும் அவர் கூறினார்.

குடியரசுத் தலைவர் உரை முடிந்தவுடன் பொருளாதார ஆய்வறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாளை மறுநாள் நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், பட்ஜெட்டை தாக்கல் செய்ய உள்ளதாகவும் அவர் கூறினார்.

இதனைத்தொடர்ந்து, குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதமும், பட்ஜெட் மீதான விவாதமும் அடுத்த மாதம் 13-ஆம் தேதிவரை நடைபெறும் என்றார்.

இதன் பின்னர் இரண்டாம் கட்ட பட்ஜெட் கூட்டத்தொடர் மார்ச் மாதம் 10-ஆம் தேதி தொடங்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தில்லி சட்டப்பேரவைத் தேர்தல் காரணமாக, அடுத்த மாதம் 5-ஆம் தேதி அவை நடவடிக்கைகள் நடைபெறாது என்றும் திரு கிரண் ரிஜிஜு கூறினார்.

<<<<>>>>

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப பாதுகாப்பிற்கென மையம் ஒன்று ஏற்படுத்தப்படும் என்று மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் இதற்கான அறிவிப்பை வெளியிட்ட அவர், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப நிபுணர்கள், ஆய்வாளர்கள் மற்றும் துறைசார்ந்தவர்கள் பங்கேற்புடன் இந்த மையம் ஏற்படுத்தப்படும் என்றார்.

இதற்காக உள்நாட்டிலேயே உருவாக்கப்படும் தொழில்நுட்பத்தை வடிவமைப்பதற்கென எட்டு திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாகவும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தின் நலனுக்கும், தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் பிரதமர் திரு. நரேந்திர மோடி கூடுதல் முக்கியத்துவம் அளித்து வருவதாக மத்திய சுரங்கத்துறை அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

டங்ஸ்டன் சுரங்க ஏலத்தை ரத்து செய்ததற்காக மதுரை மாவட்டம் அரிட்டாப்பட்டியை சேர்ந்த மக்களின் சார்பில் வல்லாளப்பட்டியில் இன்று தமக்கு அளித்த பாராட்டு விழாவில் பங்கேற்று அவர் பேசினார்.

இப்பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று சுரங்கத்திற்கான ஏலத்தை மத்திய அரசு ரத்து செய்திருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<>>>>

தொழிலாளர் நலனுக்கான சீர்திருத்த நடவடிக்கைகளை மாநில அரசுகளோடு இணைந்து மத்திய அரசு தொடர்ந்து மேற்கொள்ளும் என்று தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

புதுதில்லியில் இரண்டு நாட்களாக நடைபெற்ற மாநிலங்களின் தொழிலாளர் நலத்துறை அமைச்சர்கள் பங்கேற்ற மாநாட்டில் இன்று அவர் நிறைவுரையாற்றினார்.

இந்த மாநாட்டில், மருத்துவக்காப்பீடு, விபத்து காப்பீடு, ஓய்வூதியம் போன்ற நலத்திட்டங்களை செயல்படுத்துவது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான இணையதளத்தில் இதுவரை 30 கோடிக்கும் மேற்பட்டோர் பதிவு செய்திருப்பதாகவும் திரு மன்சுக் மாண்டவியா கூறினார்.

<<<<>>>>

சிறுபான்மை மக்களுக்கு திமுக அரசு எப்போதும் பாதுகாப்பாக இருக்கும் என்று மாநில அமைச்சர் திருமதி கீதா ஜீவன் கூறியுள்ளார்.

தூத்துக்குடியில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், அரசின் திட்டங்கள் அனைவரையும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில், திமுக அரசு செயல்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

<<<<>>>>

தேசப்பிதா மகாத்மா காந்தியின் பிறந்த தின மற்றும் நினைவுதின நிகழ்வுகளை சென்னை காந்தி மண்டபத்தில் உரிய முறையில் நடத்த வேண்டும் என்று தாம் பலமுறை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலினிடம் விடுத்த கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக ஆளுநர் திரு ஆர் என் ரவி குறை கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், சென்னை கிண்டி தேசிய உயிரியல் பூங்காவையொட்டி, முன்னாள் முதலமைச்சர் காமராஜரால் மகாத்மா காந்தியின் மண்டபம் பிரம்மாண்டமாக கட்டப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும், தேசப்பிதா காந்தி தொடர்பான நிகழ்வுகளை நகர அருங்காட்சியகத்தின் ஒரு மூலையில் நடத்துவதில் ஏதேனும் அர்த்தம் உள்ளதா என்றும் அவர் வினவியுள்ளார்.

தேசப்பிதா, தமது வாழ்நாளில் திராவிட சித்தாந்தத்தை பின்பற்றுபவர்களால் கடுமையாக எதிர்க்கப்பட்டு கேலி செய்யப்பட்டதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதும் அது தொடர வேண்டுமா என்றும் திரு ஆர் என் ரவி வினவியுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் மக்களின் குறைகளுக்கு தீர்வுகாண்பதற்கு பதிலாக, அவர்கள் மீது அடக்குமுறையை திமுக அரசு ஏவிவிடுவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மதுரை மாவட்டத்தில் மக்கள் பிரச்சினைக்காக அறவழியில் போராடிய முன்னாள் அமைச்சர் திரு உதயகுமாரையும், பொதுமக்களையும் திமுக அரசு கைது செய்திருப்பது கண்டிக்கத்தக்கது என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

திண்டுக்கல் பூச்சந்தையில் பனிப்பொழிவின் காரணமாக பூக்களின் வரத்து குறைந்துள்ளது.

இதனால், மல்லிகைப்பூ விலை கிலோ ஒன்றுக்கு நான்காயிரம் ரூபாய் வரை விற்பனை செய்யப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - ராஜசேகரன் - 53 செகண்ட்ஸ்)*

<<<<>>>>

தென்மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒருசில பகுதிகளில் அடுத்த இரு தினங்களில் கனமழைக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை 26 செகண்ட்ஸ்)

<<<<>>>>

*மாவட்டச் செய்திகள்*

பெரம்பலூர் மாவட்டம் திருமாந்துறை ஊராட்சியில் அரசின் நலத்திட்ட உதவிகளை மாநில அமைச்சர் திரு சிவசங்கர் இன்று பயனாளிகளுக்கு வழங்கினார்.

<<<<>>>>

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொழுநோய் விழிப்புணர்வு முகாம் இன்று நடைபெற்றது. தருமபுரி மாவட்டத்திலும் தொழுநோய் விழிப்புணர்வு குறித்த நிகழ்ச்சிகள் ஆட்சியர் திருமதி சாந்தி தலைமையில் இன்று நடைபெற்றது.

<<<<>>>>

சிவகங்கை மாவட்டத்தில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்கீழ், மூன்று கோடி ரூபாய் செலவில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் கூறியுள்ளார்.

<<<<>>>>

கன்னியாகுமரி, அரியலூர் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் மனிதநேய வார விழா அம்மாவட்டங்களின் ஆட்சியர்கள் தலைமையில் நடைபெற்றன.

<<<<>>>>

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் உள்ள தேசிய மேல்நிலை பள்ளி விளையாட்டு மைதானத்தில் அறிவியல் கண்காட்சி இன்று நடைபெற்றது.

<<<<>>>>>

மயிலாடுதுறை மாவட்டம் திருச்சம்பள்ளியில் உள்ள வனவியல் அலுவலகத்தில் கடல் ஆமைகள் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் இன்று நடைபெற்றது.

<<<<>>>>>

சென்னை மாவட்டத்தில் சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜெகடே தலைமையில் இன்று நடைபெற்றது.

<<<<>>>>>

தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்டம் சார்பில் ரயில்வே வார விழா இன்று நடைபெற்றது.

<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

தாய்லாந்து மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் ஸ்ரீகாந்த் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-19, 21-15, என்ற செட் கணக்கில், ஹாங்காங்கின் **Jason Gunawan**–ஐ வென்றார்.

மற்றொரு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் சங்கர் சுப்பிரமணியன் 9-21, 21-10, 21-17 என்ற செட் கணக்கில் இந்தோனேஷியாவின் **Chico Dwi Wardoyo**-வை வென்று காலிறுதிக்கு முன்னேறினார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் ரக்ஷிதா சந்தோஷ் ராம்ராஜ் 21-15, 21-12 என்ற செட் கணக்கில், சீன தைபே-யின் **Tung**-ஐ வென்று காலிறுதிக்கு தகுதிபெற்றார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் **Sai Pratheek - Pruthvi Roy** இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**<<<<>>>>>**

புரோ லீக் ஆடவர் ஹாக்கிப் போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது,

ஹர்மன் பிரீத் சிங் தலைமையிலான இந்த அணியில், 31 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இப்போட்டி புவனேஷ்வரில் அடுத்த மாதம் 15-ஆம் தேதி தொடங்கி, 25-ஆம் தேதிவரை நடைபெறுகிறது.

**<<<<>>>>>**

தேசிய விளையாட்டுப் போட்டியில் தமிழகத்தின் நர்மதா ராஜு தங்கப்பதக்கம் வென்றார்.

உத்தராகண்டில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் பத்து மீட்டர் மகளிர் துப்பாக்கிச் சுடும் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

**<<<<>>>>>**

தூத்துக்குடியில் நடைபெற்ற தென்மண்டல அளவிலான தீயணைப்புத்துறை வீரர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை நெல்லை மற்றும் தென்காசி மாவட்ட அணிகள் வென்றன.

<<<END>>>>